ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1793/11 - 2013 ජනවාරි 16 වැනි බදාදා - 2013.01.16
*1793/11 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மஹல்வறாவையில் சேவை வசதிகள் மத்தியஸ்தானத்திற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், மஹல்வறாவை கிராமத்தில் அமைந்துள்ள, மஹல்வறாவை கிராம சேவகர் பிரிவு, இல. 581ஈ இல் அமைந்துள்ள, பூர்வாங்க மாதிரிப்பட இல. கொ 9182 இல் காட்டப்பட்ட துண்டு இல. 2 இன் விபரம் பின்வருமாறு :

**துண்டு இல. 2**

காணியின் பெயர் : பெலங்கஹாவத்த ; விபரம் : தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : திரு. ஆர். ஏ. எஸ். ஹேமபால, இல. 57, அத்துருகிரிய வீதி, ஹோமாகமை, திரு. பி. டி. பியசேன, இல. 337, ஹைலெவல் வீதி, மஹரகமை, பன்னிபிட்டி, திரு. எம். பி. பீரிஸ், இல. 97, மஹல்வறாவை, பன்னிபிட்டி மற்றும் ஏனையோர் ; விஸ்தீரணம் : 0.1642 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு கெஸ்பேவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எல். ஏ. களுகபு ஆரச்சி,
பிரதேச செயலாளர்,
சுவீகரிப்பு உத்தியோகத்தர்,
கெஸ்பேவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கெஸ்பேவ,
2012.12.31.

02-55